வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்- ரோஷ்னா காசிம்

தேதி 26.09.2026 நேரம் மாலை 6.10 மணி

---

## தலைப்புச் செய்திகள்

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தங்கப்பதக்கம் வென்றுள்ள இந்திய ஆடவர் மற்றும் மகளிர் கபடி அணிகளுக்கு குடியரசுத் தலைவர் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் 138ஆவது மன் கீ பாத் நிகழ்ச்சி, நாளைக் காலை 11 மணிக்கு ஆகாஷ்வாணியில் ஒலிபரப்பாக உள்ளது.

ஐ.நா சபையின் 81ஆவது கூட்டத்தில் பங்கேற்க அமெரிக்கா சென்றுள்ள வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், ஈரான் மற்றும் ரஷ்ய வெளியுறவு அமைச்சர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினார்.

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் நாடு தழுவிய வேலை நிறுத்தம் காரணமாக, வாடிக்கையாளர்களின் சிரமங்களை குறைக்கும் வகையில், நாளை ஞாயிற்றுக் கிழமை அனைத்து வங்கிகளும் இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

-----------------------------

## ஆசி□ விளை□ ாட்டு 1 (18)

ஜப்பானில் நடைபெறும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்திய ஆடவர் மற்றும் மகளிர் கபடி அணிகள், ஈரான் அணிகளை வீழ்த்தி தங்கப் பதக்கங்களை வென்றுள்ளன. ஈரானுக்கு எதிராக இன்று நடைபெற்ற இறுதிப் போட்டியில், பலம் வாய்ந்த ஈரான் அணியை எதிர்த்து சிறப்பாக ஆடி, தனது சேம்பியன் பட்டத்தை இந்திய பெண்கள் அணி தக்க வைத்துக் கொண்டுள்ளது. 2022ஆம் ஆண்டு மாஸ்கோவில் நடைபெற்ற

ஆசிய விளையாட்டுப் போட்டிகளிலும், இந்திய மகளிர் அணி, கபடி விளையாட்டில் தங்கம் வென்றது குறிப்பிடத்தக்கது. இந்திய கபடி அணிகளின் இந்த வெற்றிக்கு, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, வாழ்த்து தெரிவித்துள்ளார். கடின உழைப்பால் கிடைத்த இந்த வெற்றி, துணிச்சல், நிதானம், மற்றும் தளராத உறுதி ஆகியவற்றை பிரதிபலிப்பதாக, அவர் தனது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், மகளிர் 50 மீட்டர் ரைஃபிள் 3 பொசிஷன்ஸ் குழுப் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்ற திலோத்தமா சென், வித்ர்சா வினோத் மற்றும் ஆஷி செளக்சி மற்றும் ஸ்குவாஷ் கலப்புப் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற ஜோஷ்னா சின்னப்பா, வேலவன் செந்தில் குமார் ஆகியோருக்கும், குடியரசுத் தலைவர் திருமதி முர்மு, குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.



விளையாட்டு வீரர்களின் இந்த சிறப்பான செயல்பாடுகள், நாட்டிற்கு அளவற்ற பெருமையை கொண்டு வந்துள்ளதாகவும், நாடு முழுவதும் உள்ள எண்ணற்ற இளம் விளையாட்டு வீரர்களுக்கு உத்வேகம் அளிப்பதாகவும் திரு. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் கூறியுள்ளார்.

தடகள போட்டிகளில், சவான் பர்வால், ஆண்கள் மாரத்தான் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார். இந்த பிரிவில் 44 ஆண்டுகளுக்கு பிறகு இந்தியா பதக்கம் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆசிய விளையாட்டு போட்டிகளில் இந்தியா இன்று, கபடி, தடகளம், ஸ்குவாஷ், துப்பாக்கி சுடும் பிரிவுகளில் 4 பதக்கங்களை வென்று, 4 தங்கம், 11 வெள்ளி, 13 வெண்கலப் பதக்கங்களுடன், பதக்கப் பட்டியலில் 10ஆவது இடத்தில் உள்ளது.

-----------------------------

## சேவா சங்கல்ப் -1 (13)

மக்கள் சேவை மூலமான தேச சேவை என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில், பொது சேவையில் 25 ஆண்டுகளை பூர்த்தி செய்யும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் சேவைப் பயணம், இன்று வரை அயராத உறுதிப்பாட்டுடன் தொடர்கிறது. சேவை மற்றும் நல்லாட்சி என்னும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வைக்கு ஏற்ப, 2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கை நோக்கி, நாடு தொடர்ச்சியாக பயணித்து வருகிறது. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி-அனைவருக்கும் சமூக அதிகாரம் என்னும் அரசின் கொள்கையினால், நாட்டு மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சேவா சங்கல்ப் அபியான் என்னும், இந்த சிறப்பு தொடரில், பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலை நோக்கு பார்வை அடிப்படையிலான, வணிகம் செய்வதில் எளிமை குறித்த ஒரு செய்தி தொகுப்பு....

(வாய்ஸ்)

## சேவா சங்கல்ப் 2 (14)

(வாய்ஸ்)

கடந்த 2014ஆம்ஆண்டு வரை, எளிமையான முறையில் வணிகம் செய்யும் நாடுகளின் வரிசையில், உலகின் 142ஆவது நாடாக இந்தியா இருந்தது. இது, நேபாளம், மற்றும், பாகிஸ்தானைவிடவும், பின்தங்கிய நிலையாகும். ஒரு நிறுவனத்தை பதிவு செய்ய சுமார் 1 மாத காலம் பிடித்தது. வணிக பொருட்களுடன் 3 மாநிலங்களை கடக்கும் ஒரு லாரி, 3 விதமான வரிகளை செலுத்தி, ஒவ்வொரு எல்லையிலும் காத்திருக்கும் கால அவகாசமும் அதிகம். 60 ஆண்டுகளாக குவிந்து கிடந்த இந்த ஒழுங்குமுறை சுமை, ஒழுங்குமுறை கொலஸ்ட்ரால் என்று அழைக்கப்பட்டது. சரக்கு மற்றும் சேவை வரி அமல்படுத்தப்பட்டு, பிரத்யேக சரக்கு வழித்தடங்கள், புதிய விரைவுச் சாலைகள், மற்றும், மேம்பட்ட சாலைகள் போன்ற வசதிகள் கொண்டு வரப்பட்டதுடன், காகிதப் பணிகளுக்கு பதிலாக, டிஜிட்டல் பரிவர்த்தனைகளும் மேற்கொள்ளப் பட்டதால், போக்குவரத்துக்கான நேரம் குறைக்கப்பட்டதுடன், வணிகம் செய்வது எளிமையாக்கப்பட்டுள்ளது.

------------------------------

## சேவா சங்கல்ப் 3 (9)

திவால் மற்றும் நொடித்துப் போதல் சட்டம், மற்றும், ஜன் விஸ்வாஸ் சட்டம் ஆகியவை அறிமுகப்படுத்தப்பட்டு, நிறுவன சட்டம் எளிமையாக்கப்பட்டதுடன், தொழில் முனைவோருக்கு ஒரு உத்வேகத்தையும் அளித்தது. இத்தகையை நடவடிக்கைகள் மூலம்

2020ஆம் ஆண்டுக்குள் இந்தியா 63ஆவது இடத்திற்கு முன்னேறியது. இது, எந்தவொரு பெரிய பொருளாதார நாட்டையும் விட, இந்தியா பதிவு செய்த மிகப் பெரிய முன்னேற்றங்களில் ஒன்றாகும். இந்தியா தற்போது தேவையற்ற கட்டுப்பாடுகளை தகர்த்து, தொடர்ந்து முதலீடுகளை ஈர்ப்பதன் மூலம், வணிகங்களுக்கு சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கிறது என்றால் அது மிகையில்லை.

-----------------------------

## மன் கீ பாத் (10)

பிரதமர் திரு. நரேந்திர மோடி தமது எண்ணங்களை இந்தியா மற்றும் வெளி நாட்டு மக்களுடன் பகிர்ந்து கொள்ளும் மனதின் குரல் நிகழ்ச்சி நாளைக் காலை 11 மணிக்கு ஆகாஷ்வாணியில் ஒலிபரப்பாக உள்ளது. இது பிரதமரின் 138ஆவது மன் கீ பாத் நிகழ்ச்சியாகும். இந்நிகழ்ச்சி, ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷன் தொலை காட்சியின் அனைத்து அலைவரிசைகளிலும் ஒலிப்பரப்பாகும். பிரதமரின் ஹிந்தி உரையை தொடர்ந்து, அந்தந்த மாநில மொழிகளில் பிரதமரின் உரை ஒலிபரப்பாகும். மனதின் குரல் நிகழ்ச்சியின் தமிழ் வடிவம், நாளை இரவு 8 மணிக்கு புதுச்சேரி மற்றும் தமிழகத்தில் உள்ள அனைத்து ஆகாஷ்வாணி நிலையங்களிலும் மறு ஒலிபரப்பு செய்யப்படும்.

-----------------------------

## ஜெய்சங்கர் 1 (19)

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், நியூயார்க்கில் நடைபெறும் ஐ.நா சபையின் 81ஆவது கூட்டத்தில்

உரையாற்றுகிறார். 193 உறுப்பு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் இக்கூட்டத்தில், சர்வதேச விவகாரங்களில் முன்னுரிமைகள் குறித்து ஆலோசிக்கப்படுகிறது. முன்னதாக, சர்வதேச அமைதி மற்றும் கடல்சார் பாதுகாப்பில், செயற்கை நுண்ணறிவு குறித்த கூட்டத்தில், டாக்டர்ஜெய்சங்கர் உரையாற்றினார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள பதிவில், செயற்கை நுண்ணறிவை பயன்படுததும் அதே வேளையில், அதன் பாதுகாப்பு அபாயங்களை குறைப்பது அவசியம் என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும், சர்வதேச சட்டங்கள், மற்றும், கடல் சட்டங்கள் விதிமுறைகளின்படி, நியாயமான முறையில், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தி உள்ளார். வெளிப்படை தன்மை, நம்பகத் தன்மை, திறன் மேம்பாடு, தொழில்நுட்ப ஒத்துழைப்பு, சிறந்த நடைமுறைகளின் பரிவர்த்தனைகள் மூலம் செயற்கை நுண்ணறிவை மேம்படுத்துவது அவசியம் என்றும் அவர் கூறியுள்ளார்.

தீவிரவாத செயல்களுக்கு பாகிஸ்தான் தொடர்ந்து ஆதரவு அளித்தால், உரிய விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று, இந்தியா எச்சரித்துள்ளது. ஐநா பொது சபை கூட்டத்தில் பாகிஸ்தான் ஆற்றிய

**ஜெய்சங்கர்** 2 (8)

உரைக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இந்தியா இவ்வாறு தெரிவித்துள்ளது. தீவிரவாதத்தை ஒடுக்குவதில், பாகிஸ்தான் இரட்டை நிலைப்பாட்டை கொண்டுள்ளதாகவும், இந்தியா குற்றம்சாட்டி உள்ளது. இதற்கிடையே, ஐநா பொது சபைக் கூட்டத்தில் பங்கேற்க அமெரிக்கா

சென்றுள்ள டாக்டர் ஜெய்சங்கர், ஈரான் மற்றும் ரஷ்ய வெளியுறவு அமைச்சர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினார். மேற்காசியாவில் நிலவும் சூழல் உள்ளிட்ட பல்வேறு சர்வதேச பிரச்சனைகள் குறித்து இந்த பேச்சு வார்த்தையின் போது விவாதிக்கப்பட்டது.

-----------------------------

## வங்கி சேவை 1 (8)

வார இறுதி நாட்கள் விடுமுறை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, வரும் 28ஆம் தேதி முதல் 3 நாட்களுக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் நாடு தழுவிய வேலை நிறுத்தம் அறிவிக்கப் பட்டுள்ள நிலையில், வாடிக்கையாளர்களின் சிரமங்களை குறைக்கும் வகையில், நாளை ஞாயிற்றுக் கிழமை அனைத்து பொதுத் துறை வங்கிகளும், மண்டல கிராமப்புற வங்கிகளும் வழக்கம் போல் இயங்கும் என்று மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது. இதுகுறித்த ஒரு செய்தித் தொகுப்பு.....

(வாய்ஸ்)

## வங்கி சேவை 2 (14)

(வாய்ஸ்)

வங்கி தொழிற்சங்கங்களின் ஒருங்கிணைந்த கூட்டமைப்பு சார்பில், இம்மாதம் 28, 29, மற்றும் 30ஆம் தேதிகளில், நாடு தழுவிய வேலை நிறுத்தம் நடைபெறும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. இந்நிலையில், வாடிக்கையாளர்களுக்கு ஏற்படும் சிரமங்களை குறைக்கும் வகையில்,

தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை வங்கிகள் மேற்கொண்டு வருகின்றன. அதன்ஒருபகுதியாக வரும் 27ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமையன்று அனைத்து பொதுத் துறை மற்றும் மண்டல-கிராமப்புற வங்கிகளும் இயங்கும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. மேலும், இணைய வங்கி, மற்றும், மொபைல் வங்கி, யுபிஐ, ஏடிஎம், மற்றும், பிற டிஜிட்டல் வங்கி சேவைகளை அதிக அளவில் பயன்படுத்திக் கொள்வதன் மூலம், வங்கி சேவைகள் பாதிக்கப்படுவதால் ஏற்படும் சிரமங்களை பொது மக்கள் தவிர்க்கலாம் என்றும், நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது. மேலும், போராட்டத்தை கைவிடுமாறு வங்கி சங்கங்களுக்கு மத்திய அரசு வேண்டுகோள் விடுத்திருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

-----------------------------

## காந்தி ஜெ ந்தி (6)

காந்தி ஜெயந்தியை முன்னிட்டு, அக்டோபர் 2ஆம் தேதி, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் உள்ள அனைத்து சாராயம், கள் மற்றும் மதுபானங்களுடன் இணைந்த பார்கள், உணவகங்கள், மற்றும் விடுதிகள் இயங்க தடைவிதிக்கப் பட்டுள்ளது. இந்த உத்தரவை மீறுபவர்கள் மீது, புதுச்சேரி கலால்துறை விதிகளின்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கலால்துறை எச்சரித்துள்ளது.

-----------------------------

## கைலாஷ்நாதன் (14)

மத்திய கலாச்சார அமைச்சகத்தின்கீழ் இயங்கும் இந்திரா காந்தி தேசிய கலை மையம் மற்றும் புதுச்சேரி அரசு, கலை பண்பாட்டு துறை சார்பில் "சேவை விழா - பாரதப் பிரதமரின் தொலைநோக்குப் பார்வையில் வளர்ச்சி அடைந்த பாரதம் 2047" நிகழ்ச்சி கருவடிக்குப்பம் காமராஜர் மணிமண்டபத்தில் இன்று நடைபெற்றது. துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் நிகழ்ச்சியை தொடங்கி வைத்து, வந்தே மாதரம் தேசிய பாடலின் நாட்டிய வடிவ டிஜிட்டல் ஒளிப் பேழையை வெளியிட்டார். மேலும், சேவை விழா 2025-ஐ ஒட்டி நடத்தப்பட்ட மாநில அளவிலான ஓவியப் போட்டியில் பரிசு பெற்ற ஓவியர்களுக்கு பரிசுகளை வழங்கி சிறப்பித்தார். அதனைத் தொடர்ந்து, பரதநாட்டியம் மற்றும் நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. கலை பண்பாட்டுத்துறை அமைச்சர் திரு. ராஜவேலு, கலை பண்பாட்டு துறை இயக்குனர் திரு. சக்திவேல், இந்திரா காந்தி தேசிய கலை மையத்தின் மண்டல இயக்குனர் திரு. சுமித் தே ஆகியோர் பங்கேற்றனர்.

------------------------------

## தூய்மை இந்தி[illegible] ா (5)

சேவா சங்கல்ப் அபியான் திட்டத்தின் ஒருபகுதியாக, ஏனாம் காவல் துறையினரால் ராஜீவ் ஆற்றங்கரையில் தூய்மைப் பணிகள் இன்று மேற்கொள்ளப்பட்டன. எஸ்.பி. வரதராஜன் மேற்பார்வையில் நடைபெற்ற இந்த தூய்மைப் பணியில், பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 150 காவலர்கள், மற்றும், ஊர் காவலர்கள் பங்கேற்று, ஆற்றங்கரையில் இருந்த கழிவுகளை அகற்றினர்.

-----------------------------

## ஓட்டுனர் உரிமம் (7)

சங்கல்ப சேவா அபியான் திட்டத்தின் ஒரு பகுதியாக ஏனாம் பகுதி பெண்களுக்கு கற்றல் ஓட்டுநர் உரிமம் வழங்கும் நோக்கத்துடன், ஏனாம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில், சனிக்கிழமையான இன்று, LLR Pink தினம் நடத்தப்பட்டது. ஏனாம் வட்டார நிர்வாகி திரு. சிவராஜ் மீனா பெண்களுக்கு உரிமங்கள் வழங்கும் பணியை தொடக்கி வைத்தார். நிகழ்ச்சியில் உதவி வட்டார ஆய்வாளர் திரு. அருள்முருகன், வேளாண்துறை துணை இயக்குநர் ஜோகிராஜு ஆகியோர் கலந்து கொண்டனர்.

-----------------------------

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தங்கப்பதக்கம் வென்றுள்ள இந்திய ஆடவர் மற்றும் மகளிர் கபடி அணிகளுக்கு குடியரசுத் தலைவர் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் 138ஆவது மன் கீ பாத் நிகழ்ச்சி, நாளைக் காலை 11 மணிக்கு ஆகாஷ்வாணியில் ஒலிபரப்பாக உள்ளது.

ஐ.நா சபையின் 81ஆவது கூட்டத்தில் பங்கேற்க அமெரிக்கா சென்றுள்ள வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், ஈரான் மற்றும் ரஷ்ய வெளியுறவு அமைச்சர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினார்.

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் நாடு தழுவிய வேலை நிறுத்தம் காரணமாக, வாடிக்கையாளர்களின் சிரமங்களை குறைக்கும் வகையில்,

நாளை ஞாயிற்றுக் கிழமை அனைத்து வங்கிகளும் இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.